©
தமிழ்நாடு அரசு
**2015**

கையெழுத்துத் தொடர்

# நிதி (படிகள்)த் துறை

**அரசு ஆணை எண்.316, நாள் 22.12.2015.**
*(மன்மத, மார்கழி– 6 , திருவள்ளுவர் ஆண்டு 2046)*

**அதிகார ஒப்படைப்பு – மாற்றுத் திறனாளிகள்** – ஊர்திப்படி – மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களுக்கு ஊர்திப்படி அனுமதிக்கும் அதிகாரத்தை மாவட்ட அளவிலான சார்பு அலுவலருக்கு ஒப்படைப்பு – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

பின்வருவனவற்றைப் படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.667, நிதி (ஊதியக்குழு) துறை, நாள் 27.06.1989.
2. அரசு ஆணை எண் 391, நிதி (படிகள்)த் துறை நாள்.07.10.2010.
3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க.எண்.6643/மா.தி.ந.3(1)/2014, நாள் 10.04.2015.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசு ஆணையில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஊர்திப்படியாக ரூ.50/– வழங்கியும் மாற்றுத் திறனாளி அரசுப் பணியாளர்கள் ஊர்திப்படி வேண்டி மனு அளித்த பிறகு துறைத் தலைவர் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில், அப்பரிந்துரை பெற்ற நாள் முதல் ஊர்திப்படி வழங்கிட வகை செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. இவ்வூர்திப்படியானது உயர்த்தப்பட்டு தற்போது மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 01.10.2010 முதல் மாதம் ஒன்றிற்கு ரூ.1000/– என்ற அளவில் வழங்கப்படுகிறது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகள் துறைத்தலைவரின் ஊர்திப்படி அனுமதி பெறுவதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது என்றும், இதனால் மாற்றுத் திறனாளி அரசுப்பணியாளர்களுக்கு ஊர்திப்படி மிகவும் காலதாமதமாக வழங்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, அரசு மருத்துவ குழுவால் மாற்றுத்திறன் தன்மை மற்றும் சதவீதம் ஆகிய விவரங்களுடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரால் ஒப்பம் இட்டு வழங்கப்படுவதால் அதனையே

/த.பி.பா/

சான்றாக ஏற்றுக் கொண்டு மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களுக்கு ஊதியம் பெற்று வழங்கும் அலுவலர் ஊர்திப்படியினையும் வழங்கிடும் வகையில் அரசாணை வெயியிடுமாறு கோரியுள்ளார்.

**4.** முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்து, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றி மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊர்திப்படியினை அனுமதித்திட அரசுத்துறைகளின் துறைத்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை அத்துறைகளின் மாவட்ட அளவிலான சார்பு அலுவலருக்கு ஒப்படைப்பு (Delegation of Power) அளித்திடலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை–32.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–32.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை–32.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், 2, தியாகராய சாலை, எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, சென்னை–18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை–I), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை–II), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
இயக்குநர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை–15.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பளக் கணக்குகள் அலுவலர், மதுரை 625 001.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்ற ஆணையாளர், எண்.6, மாணிக்கேஸ்வரி சாலை, சென்னை–10.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.
அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.
அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர், மாநகராட்சி, சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து கோட்டாட்சியர்கள்.
அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், எண்.570, அண்ணா சாலை, சென்னை–18.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

<u>**நகல்**</u>

அரசு தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், உள்துறை அமைச்சகம், புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த்துறை) புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர்,வெளிவிவகார அமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சி அலுவலர், சம்பள ஆராய்ச்சிப்பிரிவு,
நிதி அமைச்சகம் (செலவுத்துறை),அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

**// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //**

கெ. சிவமணி.
**பிரிவு அலுவலர்**